மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு கவனத்தில்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

12—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***2559—திரு. A. நல்லதம்பி:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் நகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட அனைத்து வார்டுகளுக்கும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவாக்கம் செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் நகராட்சி எல்லையை விரிவாக்கம் செய்யும்பொழுது, திருப்பத்தூரை ஒட்டியுள்ள ஊராட்சிகள், நகராட்சியுடன் இணைக்கப்பட்டு, வார்டுகளின் எண்ணிக்கை 31–லிருந்து 36–ஆக உயர்த்தப்பட்டது. எனவே, குடிநீர்த் தேவை கணக்கீட்டின்படி ஏற்கெனவே நகராட்சிப் பகுதியாக இருந்த 31 வார்டுகளுக்கு நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் 5.84 MLD காவிரி குடிநீர் வழங்கப்படுகிறது.

மேலும், திருப்பத்தூர் நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட 5 ஊரகப் பகுதிகளைச் சார்ந்த வார்டுகளுக்கும் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம், அனைத்து வார்டுகளும் பயன்பெறும்வகையில், காவிரி குடிநீர், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை வழங்கப்பட்டு, நகராட்சி மூலமாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2024 பிப்ரவரி 14]

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் வணங்குகின்றேன்.*

திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட திருப்பத்தூர் நகராட்சி என்பது பழமையான, அதிக பரப்பளவைக் கொண்ட நகராட்சியாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஊரகப் பகுதிகளிலிருந்து நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட 5 வார்டு எண்கள் 30, 31, 32, 36 மற்றும் 3–வது வார்டு பகுதிகளிலுள்ள சிவராஜ்பேட்டை, பி.கே. நகர், வெங்கடேஷ்வரா நகர், ஆரிப் நகர், காயிதே மில்லத் நகர், குள்ளாச்சாரி வட்டம், திருமால் நகர் ஆகிய பகுதிகளில் சுமார் 10,000 மக்கள் வசித்து வருகின்றார்கள். அந்தப் பகுதியில் இதுநாள் வரையில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரிவாக்கம் செய்யப்படவில்லை. அதற்கான குழாய்கள் பதிக்கப்படவில்லை. அங்கு தேவையான நீராதாரமும் உள்ளதால், அந்தப் பகுதிகளில் புதிய பைப் லைன்களை அமைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிநீர் விநியோகத்தைச் சரி செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீராதாரம் இருக்கும்பட்சத்தில், நிச்சயமாக, மற்ற வார்டுகளிலும் பைப் லைன்கள் பதிக்கப்பட்டு, எப்படி நகரத்தில் குடிநீர் தரப்படுகிறதோ, அதே அளவுக்கு அனைவருக்கும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி துவக்கப்பட்டு வெள்ளி விழா, பொன் விழா, பவள விழா கடந்து, நூற்றாண்டு விழாவைக் காணுகின்ற தருவாயிலுள்ள பழமையான நகராட்சியாகும். இந்த நகராட்சி அலுவலகம் 65 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. 36 வார்டுகளை உள்ளடக்கிய சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள்தொகை கொண்ட நகராட்சிக்கு, கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நவீன வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பகுதிகளிலே தெரிவித்திருக்கின்றார்கள். இருக்கின்ற நிதிநிலைமைக்கேற்ப அந்த நகராட்சியிலே புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு வாய்ப்பிருக்குமானால், இந்த ஆண்டு அறிவிக்கும்போதே அது அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

புறவழிச் சாலை

***12739—திரு. மா. சின்னதுரை:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடி நகர் பகுதிக்கு புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?